# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL,PATTUKKOTTAI

| | |
|---|---|
| **STC. No.** | **180/2025** |
| **பெயர்:** | **மணிகண்டன்** |
| **தந்தை பெயர் :** | **சுப்பிரமணியன்** |
| **வயது:** | **48/2026** |
| **ஊர்:** | **க.எண்.426, மெயின் ரோடு ,<br>தம்பிக்கோட்டை வடகாடு கிராமம்,** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **வெல்டிங் தொழில்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **09th day of June 2026**
**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03:03 PM**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரி ஆஜர்.**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான செல்வி. மதுஆர்த்தி(Steno-Typist) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது).**

1. நான் எத்தனை வருடமாக சிங்கப்பூரில் இருந்தேன் என்றால், 1 வருடம் ஆகும். அது எந்த வருடம் என்றால், 2022 டிசம்பர் மாதம் சிங்கப்பூருக்கு சென்றேன், 2023 டிசம்பர் மாதம் சிங்கப்பூரில் இருந்து இந்தியா வந்துவிட்டேன். அதற்கு முன் நான் சிங்கப்பூருக்கு சென்றிருந்தேனா என்றால், 3 ஜனவரி 2013 ஆம் ஆண்டு திருமணப்பத்திரிக்கை அடிப்பதற்காக சிங்கப்பூருக்கு சென்றுவிட்டு, 10 ஜனவரி 2013 ல் திரும்ப இந்தியா வந்துவிட்டேன். 2022 டிசம்பர் மாதம் சிங்கப்பூருக்கு நான்

எதற்காக சென்றேன் என்றால், வெல்டிங் வேலை செய்வதற்காக சென்றேன். நான் வெல்டிங் வேலை செய்யும் கம்பெணி பெயர் என்னவென்றால், Wanchin engineering Private Company ஆகும்.

2. அம்மன் இன்ஜினியரிங் வெல்டிங் கடை எனது சொந்த கடையா என்றால், சொந்த கடைதான். அந்த கடை என் வீட்டில் முன்பகுதியில் இருக்கிறது, அதில் தற்போது மூன்று நபர்கள் வேலை செய்வார்கள். இந்த கடையை எத்தனை வருடமாக நடத்தி வருகிறேன் என்றால், 2010 ஆம் ஆண்டில் இருந்து தற்போது வரை கடையை நடத்திவருகிறேன். நான் முழுநேரமாக கடையில் இருப்பேனா என்றால், இல்லை, வெல்டிங் வேலை எங்கு இருக்கிறதோ அங்கு பொருட்களை எடுத்துக்கொண்டு சென்றுவிடுவோம்.

**முடிக்கப்பட்ட நேரம் 03:13 PM**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

Sd-/ M.Vishal Anand

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)

பட்டுக்கோட்டை.